யாழ்ப்பாணம்

# ஒட்டுசுட்டானில் வான்தாக்குதல், நால்வர் உயிரிழப்பு

[முல்லைத்தீவு]
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டானில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப் படையினர் நடத்திய வான் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர்.
[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 21 இதழ் 145
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 05 — 07 — 1992

## மட்டு. மோதலில் 3 புலிகள் வீரச்சாவு

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மகிழூர்முனை துறையில் சிறிலங்கா அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த 29-ம் திகதி கடும் மோதல்கள் இடம்பெற்றன.
[4-ம் பக்கம் பார்க்க]

## ஊரியான், கொம்படியில் பலத்தகுண்டுவீச்சு!

(யாழ்ப்பாணம்)
கடந்த இரு நாட்களாக ஊரியான், கொம்படி பாதைகளில் பலத்த விமானக்குண்டுத்தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுவருவதினால் கொழும்புக்குச்செல்லும் பயணிகள் பனைக்கு அப்பால் செல்லமுடி
(4ம் பக்கம் பார்க்க)

# புல்லாவெளியில் — இருதடவைமுன்னேறமுயன்ற இராணுவ முயற்சி முறியடிப்பு

## விமானங்கள் தொடர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
**புல்லாவெளியில் பலத்த விமானத் தாக்குதலின் உதவியுடன் இரு தடவைகள் இராணுவத்தினர் முன்னேற எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.**

கனரக வாகனங்கள், டாங்கிகள் சகிதம் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் விமானப்படையினரின் உதவியுடன் புல்லாவெளியிலிருந்து முன்னேற முயற்சிகள் மேற்கொண்டனர்.

இராணுவத்தின்முன்னேற்ற முயற்சியை விடுதலைப்புலிகள் தீரத்துடன் எதிர்கொண்டு தீவிரதாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் துணிகர தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர் இழப்புகளுடன் தமது முன்னேற்ற முயற்சியைக்கைவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருதடவைகளும் முன்னேறும் முயற்சி தோல்வியடைந்
(4ம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் பொம்மர் தாக்குதல் இருவர் பலி; பலர் காயம்

[உடுவில்]
சுன்னாகத்தில் நேற்று மாலை 5-30மணியளவில் குடியிருப்பு பகுதிகளை நோக்கி பொம்மர் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் இருவர் பலியானார்கள். ஏழுபேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையிலிருப்பதாக தெரியவருகிறது. எட்டு வீடுகள சேதமடைந்தன. இரு வீடுகள் தரைமட்டமாகின.

கட்டுவனிலிருந்து இடம்பெயர்ந்த வல்லிபுரம் நாகலிங்கம் (83-வயது) குண்டுத்தாக்குதலில் ஸ்தலத்திலே உடல் சிதறிப் பலியானார். பொம்மருக்கு அஞ்சி பங்கருக்குள் இருந்த தம்பிப்பிள்ளை சிவராமகிருஷ்ணன் (55வயது) சுன்னாகம் என்பவர் அதிர்ச்சியால் மரணமானார்.

காயமடைந்தவர்களில் சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டர் ஒழுங்கையைச்சேர்ந்த திருமதி குலமணிதேவதாஸ் [48 வயது] திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் (65-வயது), திருமதி
[4ம் பக்கம் பார்க்க]

## தீவக ஆசிரியர்கள் மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
இராணுவ நடவடிக்கைகளினால் தீவகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். நகரில தற்போது தமது கல்வியைத் தொடரும் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் அவல நிலைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளதாக பல தீவக பாடசாலைகளின் அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

தீவகப் பகுதிகளில் இருந்து வந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் யாழ். நகரில் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பாடசாலைகளில் போதிய இட வசதியும் தளபாட வசதியுமின்றி கஷ்டப்படுவதாகவும்
(4ம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள்தினம் இன்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மண் மீட்பிற்காக தமது உயிரை அர்ப்பணித்த கரும்புலிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் பலாத்காரமாக குடியேற்றப்படுகிறார்கள்

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மஞ்சத்தொடுவாய் பகுதியில் 420 தமிழ் குடும்பங்கள் சிறிலங்கா பாதுகாப்பு படையினரால் பலாத்காரமாக குடியேற்றப்பட்டனர்.
[4-ம் பக்கம் பார்க்க]

## இரு சட்டத்தரணிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்

[கொழும்பு]
அரசியல் காரணங்களுக்காக, தடுப்புக் காவலில் இருப்போருக்காக வாதாடும் கொழும்பிலுள்ள இரு சட்டத்தரணிகளுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக
[4-ம் பக்கம்பார்க்க]

## ஜனாதிபதி பிரேமா ஆசியநாடுகளுக்கு விஜயம்

(கொழும்பு)
ஜனாதிபதி ஆர். பிரேமதாசா செப்ரம்பர் மாதமளவில் தெற்கு ஆசியா நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்

1988-ம் ஆண்டு டிசம்பர்
[4ம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.கவும் தெரிவுக்குழுமுன் யோசனை சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வு குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன் யோசனை சமர்ப்பிக்க ஐக்கியதேசியக்கட்சி முன்வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கியதேசியக்கட்சியினரின் யோசனைகளை ஆராய பிரதமர் திரு. விஜயதுங்கா தலைமையில் ஒரு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்னை தீர்வுக்கென கட்சித் தலைமைப்பீடம் அமைச்சர்களும், கட்சி உறுப்பினர்களும் சமர்ப்பித்துள்ள யோசனைகளை மேற்படி குழு
[4-ம் பக்கம் பார்க்க]

## இருதமிழர் கைது

[மூதூர்]
மூதூர், ஜி பி. எஸ். இராணுவ முகாமிற்கு சென்ற இரு தமிழர்கள் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டைபறிச்சானை சேர்ந்த செல்லையா ஆனந்தன் [30-வயது], நந்தகுமார்சிவா (26-வயது) ஆகியோரே இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்களாவார்கள். [ரி]

## நான்கு அம்சத் திட்டத்திற்கு ஆதரவுபெற தீவிர முயற்சி

[கொழும்பு]
தமது நான்கு அம்சத் திட்டத்திற்கு ஆதரவு தேடும் முயற்சியில் கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

தென்பகுதியிலுள்ள அரசியல் கட்சிகள், தலைவர்கள், பௌத்த சமயப் பெரியார்கள், ஆளும்கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரிடம் இதற்கான ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் இக்கட்சிப் பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.

தினமும் இது தொடர்பான சந்திப்புக்களை இக்கட்சிகள் கொழும்பில் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மண்டைதீவு, கல்முனை கடலில் மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு, கல்முனை, பூநகரிப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், கடல் பகுதிகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்மீது நேற்று பல தடவைகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள்.

மேற்படி பகுதிகளைச் சுற்றியுள்ள கடல்பிராந்தியங்
[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## O/L — 92 வினுத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினுத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி: Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-6502-1)

## யூலை 17இல் செவ்வாய் மாற்றம்

ஆகஸ்ட் 31 வரை 40 நாட்களுக்குச் செவ்வாய் இடப ராசியில் சஞ்சரிக்கும்போதும், வியாழனை நோக்கும்போதும் சண்டை பரவலாகி உக்கிரமடையும். யாழ். குடாவைக் கைப்பற்ற இயலாது இராணுவ இழப்புக்கள் அதிகரிக்கும். அரசுக்குத் தோல்விகள் தொடரும். சென்ற வருடம் 7½ மாதங்கள் இடப ராசியில் செவ்வாயின் வக்கிரத்தால் வலைகுடா யுத்தம் மூண்டது.) சோபிதா — யாழ்ப்பாணம். Prof. சத்தியதாஸன், சித்தன்கேணி. (சி 6501)

## கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அநுபவமுடைய ஆசிரியரினுல் 40 மணித்தியாலத்தில் அதி உயர் விசேட சித்திக்கும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (சி 6465)

## புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

யாழ். மாவட்டத்தில் வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால், ஒவ்வொரு ஞாயிறும் மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை நடைபெறும். சனி, ஞாயிறு 4-00—6-00 Paper Class நடைபெறுகிறது. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 6499)

## சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

## பயிற்சிப் பரீட்சை

ஆண்டு – 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினுத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-6502-2)


புங்கையூரில் கோயில் கொண்ட



அத்தனே
அந்தோனி
உந்தன்
அடிமலர் சரணடைந்தோம்

ராகம்: நாத நாமக்கிரிய தாளம்: ஆதி

பல்லவி

அற்புதத்தை என்ன சொல்வேன் அந்தோனி-உந்தன்
பொற்பதத்தைப் பிடித்தவர்க்கு
புதுமை காட்டி அருளும்.

அனுபல்லவி

கற்பனைக்கும் எட்டாத் துன்பம்
காசினியில வந்தபோதும்
நற் பதக் கருணையில்
நாடி வந்து காத்தனையே.

சரணம்

எங்கும் தமிழ் ஈழமதில்
எத்தர்களின் எறிகணைகள்
பொங்கும் கடல் கப்பல் சூடும்
பொறித் துப்பாக்கி வேட்டும்
கங்குல் பகல் பொம்மர் வானில்
குண்டுகளைப் பொழிந்த போதும்
எங்களைக் காத்தனையே
எழில் பதுவை அந்தோனி.

பக்தி செய்தாய் வல்லமைகள்
பரமபிதா அருள
நித்தியமும் புங்கையூரில்
நீடுகோயில் கொண்டு நீயும்
சத்தியத்தைக் காத்தனையே
சஞ்சலங்கள் தீர்த்தனையே
அத்தனே அந்தோனி உந்தன்
அடிமலர் சரணடைந்தோம்.

கவிமாமணி பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர்,
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:

மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ
(புடவை மாளிகை)
13-14, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பாலவிநாயகர் றேடர்ஸ்
கண்டி வீதி, கிளிநொச்சி.

செ. தில்லைநாதன் J. P.
(புங்குடுதீவு-12), யாழ்ப்பாணம்.
(சி 6495)


# நகைகளை மீட்க அவகாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வங்கிகளில் அடைவு நகைகளை மீட்க மேலும் இரண்டு மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது

1983ம் ஆண்டுக்கு பின்னர் மக்கள்வங்கி கிளையில் அடைவு வைத்த நகைகளை யூன் 30ம் திகதிக்கு முன்னர் மீட்கப்படவேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது இத்திகதி இப்போது மேலும் 2 மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. [கே]

# இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பசுபதீஸ்வரா சிவன் கோவில் ஆலய அம்மன் தேர்த்திருவிழா இன்று 5ம் திகதி நடைபெறவுள்ளது. நாளை 6-ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

0 0 0

(உடுவில்)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையப் பகுதியில் உள்ள இருபத்தைந்து குடும்பங்களுக்கான இலவச திருமணப்பதிவுகளை இன்று 5-ம் திகதி நடாத்த வலிதெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் முன்வந்துள்ளது.

வலிதெற்கு சனசமூகநிலையங்களின் தலைவர் திரு. ச. சாம்பசிவம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா கலந்துகொண்டு திருமணப்பத்திர சான்றிதழ்களை வழங்குவார். (109)

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த இரதோற்சவத் திருவிழா இன்று நடைபெறுகிறது.

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறும் தீர்த்தோற்சவம் நாளை நடைபெறும்.

(உடுவில்)

உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 5ம் திகதி ஆரம்பமாகின்றது. ஜூலை 13ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். [109]

# 'பிரபாவை ஒப்படைக்குமாறு இதுவரை கோரவில்லை'

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையோ. வேறு எவரையோ இந்தியாவுக்கு நாடு கடத்தக்கோரி இந்தியா வேண்டுகோள் விடுக்கவில்லை, சம்பிரதாய பூர்வமாகவும் இந்த கோரிக்கை விடுக்கப்படவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப்படியான கோரிக்கை ஒன்று விடுக்கப்படுமானுல் அது தொடர்பான சட்டஏற்பாடுகள் பரிசீலிக்கப்படும் என திரு. பிரடமன் வீரக்கோனும் ரணில் விக்கிரமசிங்காவும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளனர். (கே)

# நெசவாளர்களுக்கு நூல் வழங்க ஏற்பாடு

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் நெசவுத் தொழில் செய்து தற்போது வேலைஇழந்திருக்கும் நெசவாளர்கள் மீண்டும் இத்தொழிலை செய்வதற்கு ஏதுவாக கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட நூலை நியாயமான விலையில் வழங்குவதற்கு மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

இதனைப பெறுவதற்கு நெசவாளர்கள் நெசவுத்தொழிலை செய்கிருர்ளெனவும், இந்நூலைப் பெற்றதும் நெசவுத் தொழிலை செய்யக்கூடிய நிலையில் இருக்கிருர்களெனவும் அப்பகுதி கிராம சேவையாளரும் புடவைக்கைத்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த நெசவு ஆசிரியரும் விண்ணப்பத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பின்னர் அப்பிரிவு உதவி அரசாங்க அதிபரின் சிபார்சு

(4ம் பக்கம் பார்க்க)

# இலவச மூக்குகண்ணுடி

(நாவற்குழி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முதற்கட்டமாக 65 வயோதிபர்களுக்கு இலவச மூக்குக் கண்ணுடி வழங்கியுள்ளது. தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு இலவச கண்ணுடி வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது. (107)

# திருவிழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புனித யாத்திரைத் தலமான புங்குடுதீவு அர்ச் அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நிகழ்வுகள் அனைத்தும் இராணுவ நடவடிக்கைகளினுல் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

# மாணவிகள் படுகாயம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானிலிருந்துபாடசாலைக்கு சென்ற இரு மாணவிகள் வாகன விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாக தெரியவருகிறது. (59)

செஞ். சங்க

# வடலியடைப்பு அலுவலகம்

(பண்டத்தரிப்பு)

செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வடலியடைப்பு அலகின் அலுவலகத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.


Practice Makes One Perfect
ஆண்டு-5
(புலமைப் பரிசில்-92)
அடுத்த பயிற்சிப் பரீட்சை
05-07-1992

மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந் நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம். பரீட்சையில தோற்றவசதியில்லாதவர்கள் வினுத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

★ Bond —யாழ்ப்பாணம்
★ Express —இருபாலை
★ Selin —கோப்பாய்
★ Pearl —நீர்வேலி
★ Kugan —ஆவரங்கால்
★ Satha Pons —உடமராட்சி
★ Brilliant —தென்மராட்சி
★ Vinyls —சுன்ஞகம்
★ National —பண்டத்தரிப்பு
★ Paarathy —சித்தன்கேணி
★ Bitsmans —மானிப்பாய்
★ Keen —திருநெல்வேலி
★ Osslo —கச்சேரியடி
★ Vinayahar —ஆனைக்கோட்டை
★ Lukky —சண்டிலிப்பாய்
★ நாவலர் கல்விக்கழகம் —ஆனைப்பந்தி

விபரங்களுக்கு:
Examination Unit
BOND
Institutes
யாழ்ப்பாணம்.
[சி-6502]

CAKE ICING SUGAR CRAFT
(WILTON METHOD)
AND GENERAL COOKERY CLASSES

புதிய வகுப்புக்கள் 11-07-1992 சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. உடன் தொடர்புகொள்ளவும்.

Yogi
Home Science Academy
71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் ரேட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி 6497)

# அங்கமிழந்தோர் தலைவிதியை மாற்றிய ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புகள்

அங்கமிழந்தோரின் தலைவிதியை மாற்றிய, ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புகளை யாழ். நகரில் பொருத்தும் நிறுவனத்தின் 5 வது ஆண்டு நிறைவுதினம் இன்ருகும்.

ஜெய்ப்பூர் செயற்கை கால்கள் இன்று நம்மவரிடையே பிரபல்யம் அடைந்து வருவதுடன் துர்அதிர்ஷ்டவசமாக தம் உறுப்புகளை இழந்தோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்து வருகின்றது. வாழ்நாள் முழுவதும் ''முடம்'' என்று இருக்காது செயற்கை உறுப்புகளின் உதவியோடு சாதாரண மனிதர்களைப்போல் நடமாடித்திரிவதற்கு இந்த ஜெய்ப்பூர் கால்கள் இன்றியமையாதவையாக இருந்து வருகின்றது.

இந்தியாவில் உள்ள ஜெய்ப்பூர் என்னும் பிரதேசத்தில் இருக்கும் புனருத்தாரண ஆய்வு நிலையத்தின் முன்னள் இயக்குநரான பேராசிரியர் பிரமோட் ஹரன்செத்தி என்பவரே இந்த ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புகளை உலகிற்கு முதன்முதல் அறிமுகப்படுத்தியவர். ஜெய்ப்பூர் சவாய்மான்சிங் வைத்தியசாலையில் வைத்தியர்கள், தொழில் நுட்பதொழிலாளர்கள், பொது மக்கள் போன்ருேர் உள்ளடக்கிய ஒருகுழுவினரின் உதவியோடு திரு. செத்தி இந்த முயற்சியில் ஈடுபட்டு அதில வெற்றியும் கண்டார்.

பேராசிரியர் திரு. செத்தியின் இந்த கண்டுபிடிப்பை முழு உலகமுமே பாராட்டியது. அதற்காக இவருக்கு நோபல் பரிசுக்கு சமமான ''மக்சசே'' விருது கிடைத்தது.

அமெரிக்கரான திரு. ரொபேர்ட்சிங்கர் என்பவரின் உதவியோடு, 1987ம் ஆண்டு ஜுலை மாதம் 1-ம் திகதி ஜெய்ப்பூர் செயற்கை கால்கள் தயாரிக்கும் நிறுவனம், முதன்முதலில் இலங்கையில் கொழும்பு யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஐந்து வருடங்களில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டுள்ளது.

யாழ். நகரில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள இந்த ஜெய்ப்பூர் செயற்கை கால்கள் பொருத்தும் நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களில் 733 பேருக்கு செயற்கை கால்களையும் 42 பேருக்கு செயற்கை கைகளையும் பொருத்தியுள்ளது. இன்னும் 366 பேர் செயற்கை கால்களையும் 54 பேர் செயற்கை கைகளையும் பொருத்துவதற்கு முன்கூட்டியே பதிவு செய்துளளதாக இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர் திருமதி எல். சிவராமலிங்கம் தெரிவித்தார்.

**தேவா**

அவர் மேலும்கூறியதாவது: யாழ். நகரில் இந்த நிறுவனத்தை நாம் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே கடந்த இருவருடங்களாக இயக்கி வருகின்றேம். எமக்கு வேண்டிய உபகரணங்களை, கொழும்பில் உள்ள எமது தலைமைச் செயலகம், இங்கு அனுப்பி வைப்பதில்பெரும் பாரபட்சம் காட்டி வருகின்றது. கொழும்பில் தயாரிக்கும் செயற்கை கால்-கை உறுப்புகள் தமது தேவைக்கே போகாது இருப்பதாகக் கூறி வருகின்றது

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின்மூலம், ...டு ல ள இராணுவத்தினர் கைகளையும் கால்களையும் இழந்து வருவதினல் அவர்களுக்கே கொழும்பு, கண்டி, காலி பகுதிகளில் உள்ள கிளைகளில் தயாரிககும் செயற்கை உறுப்புகள் பெரும்பாலும் பொருத்தப்படுவதினல் எமது தேவைகளுக்கு வேண்டிய செயற்கை உறுப்புகளை தயாரிக்கக்கூடிய மூலப்பொருட்களையே இங்கு அனுப்பிவைப்பதில் பெரும் பாரபட்சம் காட்டிவருகின்றது.

எமக்கு வேண்டிய மூலப்பொருட்களை இந்தியாவிலிருந்து மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே இங்குகொண்டு வருகின்றேம். அதற்கும் இராணுவத்தின் தலைமைச செயலகம் கடந்த ஒருவருடமாக தடைவிதித்துவந்தது.

யாழ். நகரில் உள்ள எமது தொழில் பேட்டையில் தற்போது செயற்கை கால்களையும், கைகளையும் தயாரிப்பதுடன், மூன்று சில்லு வண்டி இரண்டு சில்லு தள்ளுவண்டி, ஊன்றுகோல், கண்பார்வையற்ருேருக்கு தேவையான வெள்ளைப்பிரம்புகள் உட்பட போலியோ நோயினுல் பாதிக்கப்பட்டோர் நடக்கக்கூடிய செயற்கைக் கால்களையும் தயாரித்துவருகின்றேம். இப்பொருட்களை தயாரித்து, முறைப்படி பொருத்தும் தொழில் நுட்ப வலலுநர்களும், மறறைய நிர்வாக வாக வேலைகளைச் செய்பவர்களும் அங்கவீனர்களே.

இங்கு வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமை முன்கூட்டி பதிவுசெய்துகொண்டவர்களுக்கு செயற்கை கால்கள் பொருத்தப்படுகின்றது. இப்படி காலகள் பொருத்தப் படுபவர்கள், வெள்ளிக்கிழமை வரை எமது விடுதிகளில் தங்கியிருந்து முழுமையான பயிற்சியின் மூலம் நன்ருக நடக்கத் தொடங்கியதன் பின்பே அவர்களின் வீடுகளுக்குச் செல்கின்ருர்கள். அதுவரைக்கும் அவர்களுக்கு வேண்டிய உணவு மற்றும் வசதிகளை நாமே இலவசமாக செய்து கொடுக்கின்ருேம்.

இதேநேரத்தில் எமது தேவைகளுக்கு வேண்டிய உதவிகள் பொதுமக்களிடமோ அல்லது தொண்டர் ஸ்தாபனங்களிடமோ இருந்து கிடைப்பது மிகமிக அரிது எமககு பொதுமக்களிடமிருந்து போதிய உதவிகள் கிடைத்து வருமாகில் செயற்கைக் கால்களைப் பொருத்துவதற்கு நீண்டகாலமாக காத்திருக்கும் எம் உடன்பிறப்புகளும் தமது கவலைகளையும் துன்பங்களையும் மறந்து சாதாரண மக்களைப்போல் எம் மத்தியில் நடமாடவும் முடியும் என்று திருமதி எல். சிவராமலிங்கம் மிக மனவேதனையுடன் மேலும் கூறினர்.

# ரூ.40 லட்சம் பெறுமதியான ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

சிலாபத்தில் மதவழிபாட்டு இடமொன்றிலிருந்து சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான போதை வஸ்துகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது

இரகசியத் தகவலொன்றையடுத்து மேற்படி மத வழிபாட்டு இடத்தை முற்றுகையிட்டு உட்பகுதியை சோதனையிட்டபோது சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இந்து - முஸ்லிம் கலவரம் 12 பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் உத்தரபிரதேசத்தில் அகமதாபாத்நகரில் கடந்த இருநாட்களாக நடைபெற்றுவரும் இந்து முஸ்லீம் கலவரத்தில் இதுவரை 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் தற்போது ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் ஆங்காங்கே கலகங்கள் நடைபெறுவதால் கலகங்களை அடக்கும் படையினர் அங்கு மேலும் அனுப்பப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்துக்களின் திருவிழா ஒன்றில இடம்பெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்து இக்கலவரம் வெடித்தது. (வி)

# மண்டைதீவில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில நிலைகொண்டுள்ள இராணுவத்தின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஊடுருவல் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொலலப்பட்டதாக அரச தரப்புச்செய்திகள் நேற்றுத் தெரிவித்தன. இந்தத் தாக்குதலை தாம் எதிர்த்துத் தாக்கியதாகவும் மேலும தெரிவிககப்பட்டது. (வி

# இராசி பலன்

**05-07-1992**

**ஞாயிற்றுக்கிழமை**

**(தமிழுக்கு ஆனி 21)**

பஞ்சமி மாலை 6-49 வரை, ஷஷ்டி பி. இ. 4-35 வரை பூரம் மாலை 7-11 வரை சித்தாமிர்தயோகம் இராகு காலம் மாலை 4-28 முதல 5-58 வரை சுபநேரம் காலை 8-58 முதல் 10 - 28 வரை இரவு நடேசரபிஷேகம்.

மேடம்: பயணதடங்கல், வீண்அலைச்சல், வயிற்றுவலி.

இடபம்: உறவினர் துன்பம், மனத்தாங்கல் வெறுப்பு.

மிதுனம்: தொழில் லாபம், கௌரவம், நண்பர் உதவி.

கடகம்: எதிர்பாராதபகை, மனசஞ்சலம், காரியதடை.

சிங்கம்: இனசன வருகை, சத்துருஜயம், புத்திமேன்மை.

கன்னி: இடமாற்றம், அபவாதம், மகிழ்ச்சிக்குறைவு.

துலாம்: பந்துக்கள் உதவி, நோய்தணிவு, காரியவெற்றி.

விருச்சிகம்: பெண் உதவி, புதியசந்திப்பு, பணவரவு.

தனுசு: பலக்குறைவு, ஏமாற்றப்படுதல், வேதனை.

மகரம்: அடிமைத்தனம், மனக்கஸ்டம், குற்றஉணர்வு.

கும்பம்: புதியமுதலீடு குடும்பசுகம், சுபகாரியம்,

மீனம்: வாக்குவன்மை, அறிஞர் அறிவுரை, கடிதஉறவு.

ஜோஸ்யர்

# பிரதிக் கல்விப் பணிப்பாளர் அதிபர்கள் சந்திப்பு

[வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரவுக்குட்பட்ட கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தத்தமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கட்டடங்கள் தளபாடங்கள் முதலானவற்றின் முழுவிபரங்களுடன் கோட்ட அலுவலகத்தில் பின்வரும் திகதிகளில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணி வரை தம்மைச் சந்திக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் கேட்டுக்கொள்கிருர்.

காங்கேசன்துறைக் கொத்தணி 6ஆம் திகதியும், தெல்லிப் பழைக் கொத்தணி 7ஆம் திகதியும் அம்பனைக் கொத்தணி 8ஆம் திகதியும். மல்லாகம் கொத்தணி 9ஆம் திகதி அளவெட்டி கொத்தணி 10 ஆம் திகதியும், இளவாலை கொத்தணி 13ஆம் திகதியும், பண்டத்தரிப்புக் கொத்தணி 15ஆம் திகதியும் வட்டுக்கோட்டைக் கொத்தணி 16 ஆம் திகதியும் சுழிபுரம் கொத்தணி 17ஆம் திகதியும், காரைநகர்க் கொத்தணி 20 ஆம் திகதியும் சந்திக்குமாறு அதிபர்களுக்கு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

## வெட்டுப்புள்ளி போல்...!

கடவுளே! உமைப்போல் 'கட்டவுட் மாக்ஸ்'சும்
தொடரமுடியாத தூரமாய் உயருதே!
வேதநாயகனே! 'வெட்டுப்புள்ளி!
வெட்டிக் கழிக்குதே யாழ். மாணவரை!
'கட்' எனக் கறண்டை வெட்டினர் முன்னர்
கையால் வாயைப் பொத்துதல் போல
சட்டென வெட்டினர் உணவினை பின்னர்
சாட்டினர் பற்பல காரணம் கூறினர்
சாமி, எங்கள் பூமியின் நெய்யையும்
சாட்டிச் சாட்டி வெட்டினர் ஆமே!
தேங்காய் நெய்யை நாங்கள் ஊற்றி
தினம் அதுகொண்டு நல்விளக்கேற்றிஞேம்
பட்டென இரவையும் பளிச்சிட வைத்தோம்!
பகல், இரவாகப் பாடம் படித்தோம்!
வெட்ட வெட்டத் தழைப்பதைக் கண்டு,
கெட்டவர், கழுத்தை வெட்டுதல் போல
கட்டவுட் மாக்ஸிலும் கையை வைத்தனர்
மண்ணெய் எரித்தும், கண்ணைக் கரித்தும்
எண்ணி எண்ணி இரவில் விழித்தும்
'இதற்கு-அதற்கு' ரியூசன் எடுத்தும்
எழுதி எழுதித் தேர்வில் குவித்தும்
எதனைக் கண்டோம்...? என்ன செய்வோம்
மருத்துவன் ஆக, நல்மாக்ஸ் எடுத்தவன்
மருத்துவ மனையில் கிடந்து சிரிக்கிருன்!
கருத்துடன் வளர்த்த அவரின் பெற்ருேர்,
கடவுளே என்று கதறுகின்றனரே!
விடைதருவாயா வேதநாயகா!
வெட்டுப் புள்ளிபோல் நீ உயர்வாயா?

—''காளத்து மேகக்கவி''

# யாழ். மாவட்டத்தில் 6 மாத காலத்தில் மூவாயிரம் பேர் நாய்க்கடிக்குள்ளாகினர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு மாத காலத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர்.

விசர் நாய்க் கடிக்குள்ளாகியவர்கள் 500 பேர்வரையில் உள்ளனர்.

யாழ். போதனு வைத்தியசாலை, மந்திகை அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பளை சங்கானை, அச்சுவேலி ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ். போதனு வைத்தியசாலையில் கடந்த ஆறு மாத காலத்தில் 2083 பேர் வரையில் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 360 பேர் வரையில் விசர் நாய் கடித்த தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுள்ளனர். இன்னும் பலர் பெற்றுள் வருகின்றனர்.

மார்ச், ஏப்ரல் மாதத்தில் நாய்க்கடி குடாநாட்டில் அதிகரித்துக் காணப்பட்டிருந்ததாகவும் சுகாதாரப் பகுதியினா தெரிவித்தனர்.

பின்னர் மே, யூன் மாதங்களில் ஓரளவு குறைவாக இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு மாதங்களில் விசர் நாய்க்கடிக்குள்ளாகி தடுப்பூசி மருந்தினை உரிய காலத்தில் பெருது கவலையீனமாக இருந்த நிலையில் 25 பேர் வரையில் இறந்துள்ளனர். (56)

# பொலிஸார் சுட்டதில் எண்மர் பலியாகினர்

(புதுடில்லி)

இந்திய மத்தியப் பிரதேசத்தில பிலா என்னுமிடத்தில் பொலிஸார் மீது கல்வீச்சு நடத்திய கும்பல்மீது பொலிஸார் சுட்டதில் 8 பேர் பலியானர்கள். கல்வீச்சுச் சம்பவத்தினுல் ஒரு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் பலியானுர்.

தொலைதூர ரயில்வண்டிகள் ஓடுவதைத் தடுப்பதற்கு ஒரு தீவிரவாதக் கட்சி உறுப்பினர்கள் முயன்றபோது, அவர்களைத் துரத்தப் பொலிஸார் ஈடுபட்டபோது இச்சம்பவம் இடம்பெற்றது. (கே)

# இலங்கையில் மீண்டும் கிரிக்கெட் போட்டி

(கொழும்பு)

ஐந்தாண்டுகளின் பின்னர் இலங்கை டெஸ்ற் கிரிக்கெட் போட்டி மீண்டும் இடம்பெறவுள்ளது. அடுத்த 14 மாதங்களுக்குள் அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, இந்தியா தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கிரிக்கெட் அணிகள் அடுத்தடுத்து இலங்கைக்கு வருகை தரவுள்ளன. (மா)

## உற்சவம்

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் பறுளாய் விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று 5-ம் திகதி நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (72)

## லலித்துடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் கட்சிகள் முன்வைத்துள்ள நான்கு அம்சத் திட்டம் குறித்து அவை திரு. லலித் அத்துலத் முதலியுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை 7 தமிழ் கட்சிகளினதும் பிரதிநிதிகள் திரு. அத்துலத்முதலியுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளன.

## மெய்வல்லுநர் போட்டி

[யாழ்ப்பாணம்]

தென் மட்டுவில் மாதர் சங்கம் நடத்தும் தேனெளி பாலர் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை திருமதி ம. செல்லையா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராகசாவகச்சேரி பிரதேச ஆணையாளர் திரு. பி. சுந்தரம்பிள்ளையும். சிறப்பு விருந்தினராக திரு. பொன். சிறிவாமதேவனும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## கரும்புலிகள்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

இத்தினத்தையொட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலும் நினைவுக்கூட்டங்கள் இன்று இரவு 7-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம், தீவகப் பிரிவு மானிப்பாய் மாவீரர்கலையரங்கிலும், வடமராட்சியில் நெல்லியடியிலும், தென்மராட்சியிலும் இன்று கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது தாயகத்தின் விடியலுக்காக ஒவ்வொரு விடுதலைப் புலியும் இந்த மண்ணில் சாயும்போது ஒவ்வொரு சரித்திரமும் பிறக்கின்றது. அந்த வகையில் கரும்புலிகளின் வீரச்சாவு வித்தியாசமானவை.

இந்த கரும்புலிகளின் வரலாற்றில் மூத்த மகன் கரும்புலி கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன் துன்னாலை வீரச்சாவு-05-07-87) ஆரம்பித்து வைத்த இத்தியாக வேள்வியில் இதுவரை கப்டன் கொலின்ஸ் (பர்ணந்து சில்வெஸ்ரர் மன்னர். வீரச்சாவு 10-07-90] பின்னர் கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை தியாகராசா, வீரச்சாவு 10-07-90] மேஜர் காந்தரூபன் (யோகராசா கோணேஸ்வரன் வீரச்சாவு 10-07-90 வல்வெட்டித்துறை மேஜர் டாம்போ (கா. தயாபரன் வீரச்சாவு 19-03-91) முழங்காவில் லெப். கேணல் போர்க் (மா. அரசரெத்தினம்) சேமமடு. வீரச்சாவு: 23-11-90 கப்டன்-சிதம்பரம் [பெரிய தம்பி சந்திரன் வீரச்சாவு-5-5-91 வல்வெட்டித்துறை]. கப்டன்-ஜெயந்தன் (கருப்புக்குட்டி பத்மநாதன் வீரச்சாவு 5-5-91 மட்டக்களப்பு) ஆகிய வீரமறவர்களும் இணைந்து கொண்டனர்.

இந்த உணர்வோடுதான் இன்று ஒவ்வொரு விடுதலைப் புலியும் போராடிக் கொண்டிருக்கின்றான். "எமது [தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதற் கரும்புலியின் நாளாகிய இன்று இதுவரை கரும்புலிகளாக வீரச்சாவடைந்த எட்டுக் கரும்புலிகளையும் நினைவு கொள்கின்றோம்.

## மண்ணெண்ணை

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம் அதன் கிளைகள் மூலம் நிவாரண அட்டைக்கு அரை லீற்றர் மண்ணெண்ணை வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தற்போது வழங்கிவருகின்றது.

# இலங்கைக்கு ஆசியன் அபிவிருத்தி வங்கி 50 லட்சம் டொலர் உதவி

(கொழும்பு)

ஆசியன் அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 50 லட்சத்து 950 ஆயிரம் டொலர் நிதி வழங்கவிருக்கிறது.

இந்த நிதி வழங்கலை மணிலாவிலுள்ள வங்கி தலைமையகம் அறிவித்துள்ளது,

இலங்கையின் நீர்ப்பாசன முகாமைத்துவதற்கு இந்த நிதி பயன் படுத்தவிருக்கிறது. (மா)

## தீவக ஆசிரியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை தொடங்கி முடிவடையும்வரை கூடுதலான மாணவர்கள் தரையிலும் மரநிழல்களிலுமிருந்தே கல்விகற்று வருவதாகவும் பெரும்பாலான ஆசிரியர்களுக்குக் கூட இருப்பதற்குக் கதிரையோ அல்லது எழுதுவதற்கு மேசையோ இல்லாமல் நின்ற நிலையிலேயே மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றார்கள்.

இந்த அவல நிலைகளை யாழ். அரச அதிபருக்கும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கும் பல முறை எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லையென்று, அவர்கள் தெரிவித்துள்ளார்கள் [வி]

## ஊரியான்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாது இருப்பதாக தெரியவருகிறது.

நேற்றும் நேற்று முன்தினமும் முத்திரைச் சந்தையிலிருந்து எந்த ஒரு பஸ்வண்டிகளும் கொழும்புப் பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லவில்லை

இதேநேரம் கொழும்பிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் யாழ். நகருக்கு பயணிகள் மிகவும் சிரமப்பட்டு வந்து கொண்டிருந்தனர். [வி]

## ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 19-ந் திகதி ஜனாதிபதி பதவிக்கு வந்தபின்னர் ஜனாதிபதி பிரேமதாசா எந்த ஒரு வெளிநாடுகளுக்கும் விஜயம் செய்யவில்லை.

செப்ரம்பர் மாதமளவில் முதலாவதாக பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி பிரேமதாசா விஜயம் செய்யவிருக்கிறார். அதற்கு பின்னர் அவர் பங்களாதேஷ், பூட்டான் இந்தியா நேபாளம், மாலைதிவு ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்.

ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் ஜனாதிபதி பிரேமதாசா முதற்தடவையாக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளது குறிப்பிடத் தக்கது. [மா]

# பிரதமர் ராவ் ஓராண்டு ஆட்சியில் சாதனைகளைவிட வேதனைகளையே அதிகம் சாதித்துள்ளார்

## வெரித்தாஸ் விமர்சனம்

(மணிலா)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஆட்சிக்கு வந்து ஓராண்டு காலத்தில் சாதித்த சாதனைகளை விட வேதனை மிக்க செயல்களே அதிகம் என வெரித்தாஸ் தனது செய்தியில் விமர்சித்துள்ளது.

500 கோடி ரூபா போபர்ஸ் பீரங்கிக் கொள்வனவு ஊழல் நடைபெற்றதாகக் கூறி ஒரு அரசாங்கமே கவிழ்ந்தது. ஆனால் நரசிம்மராவ் ஆட்சியில் 3000 கோடி ரூபா பங்கு மார்க்கட் ஊழல் இடம்பெற்றதும் ஒரு நிதியமைச்சர் தன்னும் விலகவில்லையென வெரித்தாஸ் விமர்சித்துள்ளது.

மேலும் அதன் விமர்சனத்தில் தெரிவித்துள்ளதாவது:- இடஒதுக்கீடு சம்பந்தமாக இதுவரை தெளிவான நடைமுறைகளோ, அல்லது அதை செயல்படுத்தும் விருப்பமோ நரசிம்மராவ் அரசிடம் இல்லை.

முன்னர் அயோத்தி ராமர் கோயில் விடயமாக ஒரு ஆட்சியே மாறியது. ஆனால் இந்தப்பிரச்னை இன்னமும் நீறு பூத்த நெருப்பாகவேஉள்ளது.

பஞ்சாப், காஷ்மீர் பிரச்னைகள் என்றும் மாறாத புண்ணாக கிளர்ச்சி நடந்தபடியயே உள்ளன.

போபர்ஸ் பேர ஊழல் விடயமாக நடைபெற்ற விசாரணை ஆமை வேகத்தில நடைபெற்று அந்த விசாரணையை தற்போது ஒத்திப் போடுமளவுக்கு நரசிம்மராவ் அரசு போயுளளது.

இந்திரா காந்தியின் நுட்பம், ராஜீவ் காந்தியின் வேகம் வி.பி. சிங்கின் புத்திசாலித்தனம், சந்திரசேகரின் அணுகுமுறை எல்லாம் நிறைந்தவராகவேதிரு. நரசிம்மராவும் கருதப்பட்டார்.

ஆனால் எத்தனை நம்பிக்கையோடு அவர் பதவி ஏற்றாரோ அதே நம்பிக்கைத் துடிப்புடன் தான் இப்போதுமிருப்பதாக அவர் நினைக்கலாம். ஆனால் உண்மையில் நிலமை வேறுபட்டதாகவே உள்ளது. (கே)

## மண்டைதீவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களில் நேற்று கடல் தொழில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்மீது அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதினால் அச்சத்தின் காரணமாக மீனவர் அனைவரும் கரைக்குத் திரும்பிவிட்டதாக கூறப்படுகின்றது. (வி)

## நெசவாளர்களுக்கு

[2ம் பக்கத் தொடர்ச்சி]

டன் உதவிப் பணிப்பாளர் புடவைக் கைத்தொழில் திணைக்களம், செயலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். [71, 137]

## வீரவணக்கம்

(திருமலை)

திருமலையில் நேற்று முன்தினம் விமானப் படையினருடன் இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்த லெப. மல்லன் அல்லது வீமன் (சுந்தரலிங்கம் சசிகுமார், கம்பலகாமம்) நேற்று அதிகாலை வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். [ரி]

## இரு சட்டத்தரணிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மன்னிப்புச்சபை புகார் தெரிவித்துள்ளது.

இவ்விரு சட்டத்தரணிகளும் மனித உரிமைகாக்கும் சட்டத்தரணிகள் சங்கத்தை சேர்ந்தவர்களாவர்,

திரு. கலயானந்த பிரியநம, திரு. ரேகன் செனவிரத்ன என்ற இந்தஇரு சட்டத்தரணிகளையும் கறுத்தஉடையணிந்த இருவர் தினமும் இவர்களின் காரியாலயத்துக்கு வந்து விசாரித்தபடி இருக்கிறார்கள். இலக்கத்தகடு இல்லாத ஜீப் வண்டியில் வரும் இவர்கள் பற்றி பொலிசிலும் புகார் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்காக வாதாடிய சட்டத்தரணிகள் இதற்கு முன்னர் கொலைசெய்யப்பட்டுள்ளதினால், காணாமல் போவோருக்காக வாதாடும் இந்த இரு சட்டத்தரணிகளிடையேயும் பீதி ஏற்படுவது சகஜமே என தெரிவிக்கப்படுகிறது. [மா-கே]

## சுன்னாகத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லோகேஸ்வரி சின்னத்துரை (54-வயது), கந்தையா வல்லிபுரம் (65-வயது] ஆகியோர் யாழ். வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சுன்னாகம் பகுதியை திடீரென சுற்றிவட்டமிட்ட இரு பொம்மர் விமானங்கள் திடீரென கீழ்ழ பதிந்து இத்தாக்குதல்களை மேற்கொண்டன.

சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டர் ஒழுங்கையிலும், முத்துக்கிருஷ்ணன் ஒழுங்கையிலும் மூன்று குண்டுகளும் சுன்னாகம் பிரதான வீதியில் ஒருகுண்டும் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன. (109, 56)

## புல்லாவெளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தனைத் தொடர்ந்து வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து கடுமையான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

விமானங்களிலிருந்து தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்கள் இப்பகுதியில் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (ரி-56)

## ஐ. தே. கவும்

(1ம்-பக்க தொடர்ச்சி)

ஆராய்ந்து கட்சியின் தலைமைப்பீடத்திற்கு சமர்ப்பிக்கும்.

இந்த யோசனையை கட்சி தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்குமெனவும் தெரிவிக்கப் படுகிறது. [சி]

## ஒட்டுசுட்டான்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் குடியிருப்புகளை இலக்குவைத்தே இவ் விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்புப் பகுதிகளை நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதலினால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியுடன் வாழ்கின்றனர். (ரி)

## மட்டு. மோதலில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம் மோதலில் வீரவேங்கைகளான கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த மதிவதனன் [தம்பிஐயா மதிவண்ணன்], தவேந்திரன் [கந்தவனம் மகேந்திரராஜா], வர்ணன் [நல்லதம்பி இராஜேந்திரம்] ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைதி தெரிவித்துள்ளனர். [ரி]

## தமிழர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாம்களுக்கு அருகில் முஸ்லிம்கள் நெருக்கடியாக வாழும் இப்பகுதியில் தமிழர்கள் விருப்பமின்றிக் குடியேற்றப்பட்டுள்ளனர்.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை தலைமையகம்

# உதவித்தாதி பயிற்சிநெறி

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணவனை இழந்தோர், விதவைகள், ஊனமுற்றோர், அநாதைகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 16-07-92 வியாழக்கிழமைக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படவேண்டும். 18-07-92 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

க. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
03-07-1992

(எ 2274)



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News Paper at the General post office Srt Lanka under Licence Number B/10336/8